மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருக்கழுக்குன்றம்

அ.வ.எண்.10/2008

DW 1

பெயர் : வெங்கடேசன், த/பெ.நாராயணசாமி நாள் 18.10.2022

**<u>பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். நான் சென்னையில் வசித்து வருகிறேன். நான் அரசு பணியில் இருந்து ஒய்வு பெற்றுள்ளேன். தாவா சொத்து தவிர்த்து வேறு சொத்துக்களையும் நான் வாங்கியுள்ளேன். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றேனா என்றால் பெற்றேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 பட்டாவில் யார் பெயர் கண்டுள்ளது என்றால் வேதாச்சல ஆச்சாரி மற்றும் கன்னியம்மாள் பெயரில் உள்ளது. கன்னியம்மாளின் மகன் தான் இந்த வாதி என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவாக உள்ளதால் கன்னியம்மாளுக்கு அச்சொத்தில் சரிபாதி உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.40 ஏக்கர் ஆகும். அதில் வேதாச்சல ஆச்சாரிக்கு 1.25 ஏக்கர் பாத்தியம். அதை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வேதாச்சல ஆச்சாரி எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் 21.12.2006 என்று தேதி குறிப்பிட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2 நாகரத்தினத்திற்கு வேதாச்சல ஆச்சாரி மகன்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம். அதில் வேதாச்சல ஆச்சாரி

2.12.1975 ம் தேதியில் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் 5 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றாத்தரப்பினர் என்றால் சரியல்ல. நான் பழனியிடமிருந்து பி.வா.சா.ஆ.6 முன்னிலைக்கு 4.10.2007 அன்று சொத்தை கிரையம் பெற்றேன். சொத்தில்பிரச்சனை இருப்பதாக சொல்லி அதை தீர்த்துக் கொடுக்கும்படி பழனியிடமோ, நாகரத்தினமிடமோ கேட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தை 4.7.1964 ல் கோபால் நாயக்கரிடமிருந்து ராஜகோபால் நாயக்கர் ஆவண எண்.1538/1966 முன்னிலைக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனவே தான் பிரதிவாதிகள் இவ்வழக்கை ஆஜராகி வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ராஜகோபாலுக்கு சொந்தமானது என்று வில்லங்க சான்றில் தெரிந்ததால் தான் வில்லங்க சான்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் தவறான முறையில் கிரையம் பெற்றதால் அது கன்னியம்மாள் தரப்பினரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுக்க வாதிக்கு பாத்தியப்பட்டதால் விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சரியான பிரதிபலன் கொடுக்காமல் முறையற்ற வகையில் கிரையம் பெற்றுவிட்டு தவறாக எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.